Lotus Eye Hospital And Institute Limited

CIN No. : L85110TZ1997PLC007783

770/12, Avinashi Road, Civil Aerodrome Post, Coimbatore - 641 014.
Tel : 0422 - 4229900, 4229999

R.S.PURAM
155B, East Periasamy Road, Near Chinthamani,
North Coimbatore, R.S.Puram, Coimbatore - 641 002.
Ph : 0422 - 4239900, 4239999

SARAVANAMPATTI
86/1, Site No.2, TRM Avenue, Sathy Road,
Saravanampatti, Coimbatore - 641 035.
Ph : 0422 - 2210021

E-mail : info@lotuseye.org Website : www.lotuseye.org

November 20, 2026

BSE Limited **Phiroze Jeejeebhoy Towers** **Dalal Street,** **Mumbai – 400 001** **Scrip Code: 532998**	**National Stock Exchange of India Limited** **Exchange Plaza, C-1, Block G,** **Bandra Kurla Complex,** **Bandra (East), Mumbai – 400 051** **Scrip Code: LOTUSEYE**

Sir/Madam,

Sub: Newspaper Advertisement

Pursuant to Regulation 30 of SEBI (LODR) Regulations, 2015, please find enclosed copies of the Newspaper Advertisements published today in Business Standard (English) and The Tamil Hindu (Tamil) regarding the Notice of Postal Ballot of the Company.

This is for your information and records.

Thanking You
For Lotus Eye Hospital and Institute Limited

SENTHILKUMAR PRATHISH

Digitally signed by SENTHILKUMAR PRATHISH
Date: 2026.11.20 10:32:24 +05'30'

Prathish S
Company Secretary & Compliance Officer

TAMILTH Coimbatore 1 Regional_03 V.K. SAMINATHAN 213215 50605

நகரில் நடப்பவை

- ஓவியக் கண்காட்சி: கஸ்தூரி சீனிவாசன் அறநிலையம், அவிநாசி சாலை, பீளமேடு, கோவை, காலை 10 மணி முதல்
- சர்வதேச மொழியியல் நிறைவுநாள் மாநாடு: டாக்டர் உஷா கீர்த்திலால் மேத்தா அரங்கம், பாரதியார் பல்கலைக்கழகம், காலை 10.30 மணி முதல்.
- மறுநெசவு முகாம்: மாநகராட்சி கலையரங்கம், ஆர்.எஸ்.புரம், காலை 11 மணி முதல்.
- இலவச கண்சிகிச்சை முகாம்: திலகம் மண்டபம், சாணார்பாளையம், மூலனூர், காலை 9 மணி முதல்.

பெரியார் அறிவுலகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட மேலும் 20 நூல்கள் ஆய்வுக்காக அனுப்பி வைப்பு

கோவை

கோவை பெரியார் அறிவுலகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட மேலும் 20 நூல்கள் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோவை காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தின் எதிரே பெரியார் அறிவுலகம் என்ற நூலகம் மற்றும் அறிவியல் மையம் உள்ளது. இந்நூலகத்துக்கு புத்தகங்கள் வாங்கியதில் முறைகேடு நடந்ததாக புகார்கள் எழுந்தன.

இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். அத்துடன் பெரியார் நூலகத்தில் பீனிக்ஸ், அகல் விளக்கு ஆகிய பதிப்பகங்களில் இருந்து வாங்கப்பட்ட 1800-க்கும் மேற்பட்ட புத்தகங்களும், விண்டேஜ் பதிப்பகத்தில் இருந்து வாங்கப்பட்ட 257 ஆங்கில புத்தகங்களும் அகற்றப்பட்டு, பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், லஞ்சஒழிப்புத்துறை போலீஸார் 2 முறை பெரியார் நூலகத்தில் ஆய்வு செய்தனர். அதில் அகற்றப்பட்ட பகுதிகளில் அந்த நூல்கள் உள்ளதா? வேறு போலியான நூல்கள் வைக்கப்பட்டு உள்ளதா என்றும் சோதனை செய்தனர். அதுபோன்று போலி ஆங்கில நூல்களும் உள்ளனவா என்று ஆய்வு செய்தனர். அதில் தமிழ் நூல்களில் சில சந்தேகத்துக்குரிய நூல்களை தனியாக எடுத்து ஆய்வுக்காக சென்னைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறும்போது, "பெரியார் நூலகத்தில் ஆய்வு செய்யப்பட்டதில் சில நூல்களில் நாலடியார் நூல்கள் 4 வகைப்படும் என்று எழுதப்பட்டுள்ளது. இது போன்று எழுதப்பட்டு உள்ள சில நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதில் 20 நூல்கள் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த புத்தகங்களின் விலை ஒவ்வொன்றும் ரூ.1,400 ஆகும். அதுபோன்று வேறு புத்தகங்கள் உள்ளதா என்றும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது" என்றனர்.



கோவை பூ மார்க்கெட்டில் நடைபாதையை ஆக்கிரமித்து கடைகள் முன்பு போடப்பட்டிருந்த தார்ப்பாய் பந்தல் விரிப்புகளை மாநகராட்சி ஊழியர்கள் நேற்று அகற்றினர்.

மலைப்பாதை சீரமைப்புப் பணி பர்லியாறில் ஆட்சியர் ஆய்வு

கோவை

மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் செல்லும் வழித்தடத்தில் பர்லியாறு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த மாதம் மண்சரிவு ஏற்பட்டது. இதில், அரசுப் பேருந்து ஓட்டுநர் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து, அவ்வழித்தடத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "மலைப்பாதையில் சீரமைப்பு பணிகள் இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரிய அளவிலான சீரமைப்புப் பணிகள் 90 சதவீதம் முடிக்கப்பட்டு விட்டன. மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சாலை விரிவாக்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. சீரமைப்பு பணிகள் ஒரு வாரத்தில் முடியும். பின்னர், புவியியல் துறை வல்லுநர்கள் மூலம் மலைப்பாதையில் உள்ள பாறைகள் மற்றும் மண்ணின் உறுதித் தன்மையை ஆய்வுசெய்து பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின்னர், இவ்வழித்தடத்தில் மீண்டும் போக்குவரத்து தொடங்கப்படும்'' என்றார்.

LOTUS EYE HOSPITAL & INSTITUTE

லோட்டஸ் ஐ ஹாஸ்பிடல் அண்ட் இன்ஸ்டிடியூட் லிமிடெட்

CIN: L85110TZ1997PLC007783

பதிவு அலுவலகம்: எஸ்.எப்.எண்.770/12, அவினாசி சாலை, சிவில் ஏரோட்ரோம் போஸ்ட், கோவை – 641 014

Tel: 0422–4229900 E–mail: companysecretary@lotuseye.org

Website: www.lotuseye.org

அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் ("சட்டம்") பிரிவு 108 மற்றும் 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014–ன் விதி 20 மற்றும் 22, SEBI (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) 2015 விதிமுறைகளின் ஒழுங்குமுறை 44, இந்திய கம்பெனி செக்ரட்டரிஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலகத் தரநிலை – 2, கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் ("MCA") அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுடன் செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண் 03/2025 ("MCA சுற்றறிக்கைகள்") மற்றும் நடைமுறையில் உள்ள பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் (ஏதேனும் சட்டப்பூர்வ மாற்றங்கள் மற்றும்/அல்லது மறு–இயற்றல்கள் உட்பட) விதிகளுக்கு இணங்க, கட்–ஆஃப் தேதியின்படி நிறுவனத்தின் உறுப்பினர்களால் மின்னணு முறை மூலமான வாக்களிப்பு ("தொலைதூர மின்னணு வாக்களிப்பு") வழியாக மட்டுமே தபால் வாக்குச்சீட்டு மூலம் சிறப்புத் தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டிய சிறப்பு வர்த்தகங்கள் முன்மொழியப்பட்டுள்ளன என்று இதன்மூலம் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பு வழங்கப்படுகிறது.

நவம்பர் 13, 2026 வெள்ளிக்கிழமை அன்று ("கட்–ஆஃப் தேதி") உறுப்பினர்கள் / நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு, நிறுவனம் / டெபாசிட்டரிகளில் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு நவம்பர் 19, 2026 அன்று தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பை நிறுவனம் மின்னணு முறையில் அனுப்பி முடித்துள்ளது. கட்–ஆஃப் தேதியின்படி உறுப்பினராக இல்லாத ஒருவர், இந்த அறிவிப்பைத் தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே கருத வேண்டும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு:

விதிகளுக்கு இணங்க, தபால் வாக்குச்சீட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய வர்த்தகங்கள் தொடர்பான தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை நிறுவனம் CDSL மூலம் வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை எளிதாக்குவதற்காக CDSL உடன் நிறுவனம் தேவையான ஏற்பாடுகளை செய்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவிற்கான உறுப்பினர்களின் தகுதியைத் தீர்மானிப்பதற்கான கட்–ஆஃப் (cut–off) தேதி நவம்பர் 13, 2026, வெள்ளிக்கிழமை ஆகும். தபால் வாக்குச்சீட்டு மூலம் நிறைவேற்றப்பட முன்மொழியப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்கான விரிவான நடைமுறை மற்றும் வழிமுறைகள் தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த தொலைதூர மின்னணு வாக்களிப்பு நவம்பர் 20, 2026 வெள்ளிக்கிழமை காலை 09:00 மணி (இந்திய நேரப்படி) முதல் டிசம்பர் 19, 2026 சனிக்கிழமை மாலை 05:00 மணி (இந்திய நேரப்படி) வரை கிடைக்கும்.

தபால் வாக்குச்சீட்டு மூலம் தேவையான பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அது மின்னணு வாக்களிப்பிற்காகக் குறிப்பிடப்பட்ட கடைசி தேதியான டிசம்பர் 19, 2026, சனிக்கிழமை அன்று நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் மின்னணு வாக்களிப்பு செயல்முறையை நடத்துவதற்காக, M/s. பி. ஈஸ்வரமூர்த்தி & கோ, கம்பெனி செக்ரட்டரிஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அறிவிக்கப்படும் முடிவுகள், ஆய்வாளரின் அறிக்கையுடன் சேர்த்து, நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு, அதே நேரத்தில் பங்குச்சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள்/குறைகள் இருந்தால், உறுப்பினர்கள் helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800 21 09911 என்ற கட்டணமில்லா எண்ணை அழைக்கலாம்.

இயக்குனர்கள் குழுவின் உத்தரவின்படி
லோட்டஸ் ஐ ஹாஸ்பிடல் அண்ட் இன்ஸ்டிடியூட் லிமிடெட்டிற்காக
பிரதீஷ் எஸ்
நிறுவனச் செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி

இடம்: கோயம்புத்தூர்
தேதி: நவம்பர் 19, 2026

விழிப்புணர்வு போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசு

கோவை

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம், 53-வது வார்டுக்கு உட்பட்ட மசக்காளிபாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில், சுத்தம், சுகாதாரம், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா பரிசுகளை வழங்கினார்.

மாநகராட்சிப் பள்ளிகளில் கடந்த 17-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் பாலின நிபுணர்கள் மூலம் விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் கைகளை சோப்புப் போட்டு சுத்தமாகக் கழுவுதல், நல்லதொடுதல், கெட்ட தொடுதல், பருவ வயதில் ஏற்படும் உடல் மற்றும் மனநல மாற்றங்கள், மாதவிடாய் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து விளக்கப்பட்டது. மாணவர்களின் சந்தேகங்களுக்கு மருத்துவர்கள் பதிலளித்தனர்.

மசக்காளிபாளையம் பள்ளியில் 200 மாணவ, மாணவியர் பங்கேற்ற மழைநீர் சேகரிப்பு, சுகாதாரம் குறித்த ஓவியப் போட்டியும் நடைபெற்றது. மேலும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாநகராட்சி கல்வி அலுவலர் குணசேகரன், மருத்துவர்கள் விஜயலட்சுமி, வந்தனா சர்மா, பாலமுரளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



போத்தனூர் தபால் நிலையத்துக்கு வெளியே உள்ள தபால் பெட்டியின் கான்கிரீட் தளம் சேதம் அடைந்து சரிந்து விழும் நிலையில் உள்ளது.

படம்: இரா.கார்த்திகேயன்

கோவையில் கஞ்சா விற்ற 2 பேர் கைது

கோவை

கோவை சுந்தராபுரம் போலீஸார், மதுக்கரை மார்க்கெட் சாலையில் நேற்றுமுன்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, பிள்ளையார்புரம் பகுதியில் சந்தேகத்தின்பேரில் இருவரை பிடித்து விசாரித்தனர். அவர்கள் தெக்கலூரை சேர்ந்த கருப்புசாமி(26), திருப்பூர் திருநீலகண்டபுரத்தைச் சேர்ந்த வெங்கடேசன்(31) என்பதும், கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து இருவரையும் போலீஸார் கைது செய்து, 2 கிலோ கஞ்சா, ரூ.30 ஆயிரம் பணம், எடைக்கருவிகள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

ஆவின் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,
சாத்தமங்கலம், மதுரை - 625 020.

ந.க.எண்.1026/பா.உ.உ./2026 **இணையவழி ஒப்பந்தப்புள்ளி (e-Tender) அறிவிப்பு** நாள் : 19.11.2026

பொது மேலாளர், மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், மதுரை-20 அவர்களால் (2026 - 2028) இரண்டு ஆண்டிற்கு பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களிலிருந்து தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்களுக்கு பால் கொள்முதல் செய்திட, 47 பால் சேகர வழித்தடங்களுக்கான வாகனங்கள் இயக்குவதற்கான வாகனங்கள் கோரும் இணையவழி ஒப்பந்தப்புள்ளி (e-Tender) அறிவிப்பு.

பால் சேகரம் செய்யும் தார்பாயினால் மூடப்பட்ட வாகனங்களின் விபரம் பின்வருமாறு:

1	TATA Ace	700 – 1000 கிகி
2	Pick up Mahindra / Dost	1250 – 1800 கிகி
3	TATA 407	1800 – 3000 கிகி

மேற்கண்டவைகளுக்கு தகுதியான நபர்களிடமிருந்து இணையவழி ஒப்பந்தப்புள்ளி (e-Tender) இரண்டு வருட காலத்திற்கு (2026-2028) இரட்டைக் கவர் முறையில் கோரப்படுகிறது.

ஒவ்வொரு வழித்தடத்தின் இடம், தூரம், தேவையான வாகன கொள்ளளவு மற்றும் டெண்டர் நிபந்தனை விபரங்கள் டெண்டர் படிவங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

டெண்டர் படிவம் பதிவிறக்கம்: 21.11.2026 முற்பகல் 11.00 மணி முதல் 20.12.2026 பிற்பகல் 5.00 மணி வரை.

1) முன்வைப்புத் தொகை : ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஒரு வழி தடத்திற்கு மட்டும் முன்வைப்புத் தொகையை www.tntenders.gov.in என்ற இணையதளம் வழியாக மட்டுமே செலுத்த வேண்டும்.
2) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் : 20.12.2026 பிற்பகல் 5.00 மணி வரை.
3) முன் சந்திப்புக் கூட்டம். (Pre Bid Meeting)- நடைபெறும் நாள் : 30.11.2026 காலை 11.00 மணி ம.மா.கூ.பா.உ.ஒன்றியம், மதுரை.20.
4) இணையவழி ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் இடம், நாள் மற்றும் நேரம் 21.12.2026 முற்பகல் 11.00 மணி. ம.மா.கூ.பா.உ.ஒன்றியம் லிட்., மதுரை.20

நிபந்தனைகள்:

ஒப்பந்த படிவங்களை www.tntenders.gov.in என்ற இணையதள வாயிலாக இலவசமாக பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்கலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பான எல்லா விபரங்களும் ஒப்பந்த படிவம் மூலமும், நேரிலும் அறியலாம்.

பொது மேலாளர்
ம.மா.கூ.பா.உ.ஒன்றியம் லிட்., மதுரை-625 020

செ.ம.தொ.இ./3700/ஒப்பந்தப்புள்ளி/2026



கோவை மசக்காளிபாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற சுகாதாரம் உள்ளிட்ட விழிப்புணர்வு போட்டிகளில், வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா பரிசுகள் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு
தாம்பரம் மாநகராட்சி
மாநில குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 3156 /2026 /இ1. **நாள்.18.11.2026**

1. SFC Devolution 2026 - 27 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளுதல் :
   அ. Providing and Laying Bituminous Road at Nallathambi Road (Polichalur main road to Gandhi Road Junction) at ward no.07 Zone No.01 Tambaram City Municipal Corporation.
2. பணியின் மதிப்பு ரூ.108.50 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 20.11.2026 முதல் 27.11.2026 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட (https://tntenders.gov.in) வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 27.11.2026 அன்று மாலை 3.00 மணி வரை.
5. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 27.11.2026 அன்று மாலை 3.30 மணிக்கு தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் திறக்கப்படும்.
6. பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 3698 / ஒப்பந்தப்புள்ளி / 2026

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி.

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா துறை

பூ.து.ந.க.எண்.பி2/1414/2026

இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.
மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள 827 எண்ணிக்கையிலான பூங்காக்களை SHG தினக்கூலி பணியாளர்களை கொண்டு பராமரிக்கும் பணிகளை கண்காணிக்க திட்ட மேலாண்மை கலந்தாலுநர் (PMC) நியமிக்கும் பணி (ஒரு வருட காலத்திற்கு)
பணியின் மதிப்பு **ரூ.152.66 இலட்சங்கள்** முன்வைப்புத் தொகை- மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் **07.12.2026** அன்று **மாலை 3.00 மணி** வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் **08.12.2026** அன்று **மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செயற்பொறியாளர் (பூ.(ம)வி) கண்காணிப்பு பொறியாளர் (பூ.(ம)வி)

செ.ம.தொ.இ/3691/ ஒப்பந்தப்புள்ளி /2026

மாற்றுத்திறனாளிகள் குறைதீர் கூட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட மனுக்கள் குவிந்தன

திருப்பூர்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சி.முத்துக்குமரன் தலைமை வகித்தார். இதில், வீட்டு மனைப்பட்டா, அடுக்குமாடி குடியிருப்பு, வெற்றி வீடு திட்டம், மாதாந்திர உதவித் தொகை, இரு சக்கர வாகனம், வங்கி கடன், செல்போன், பேட்டரி வீல் சேர், தொழில் கடன், காதொலி கருவி, செயற்கை கால், யூ.டி.ஐ.டி கார்டு, கல்வி உதவித்தொகை பாதுகாவலர், கண் கண்ணாடி, சிறப்பு நாற்காலி, வீடு பராமரிப்பு உள்ளிட்டவை தொடர்பாக 311 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ஆனந்தி, தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் பத்மபிரியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொறுப்பு)ஜெகஜோதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நகை கொள்ளை வழக்கில் கைதான மூவருக்கு 7 ஆண்டு சிறை

கோவை

கோவை ராஜவீதியில் உள்ள சந்திரசேகர் என்பவருக்குச் சொந்தமான நகைக் கடையில், கடந்த 2017-ம் ஆண்டு மார்ச் 2-ம் தேதி 3 பேர் அரிவாளைக் காட்டி மிரட்டி 4 கிலோ தங்கக் கட்டிகள், 250 கிராம் நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பினர். புகாரின் பேரில் வெரைட்டி ஹால் ரோடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, கடையில் ஓட்டுநராகப் பணியாற்றிய தெற்கு உக்கடத்தைச் சேர்ந்த ரியாசுதீன் (35), வடவள்ளியைச் சேர்ந்த அசாருதீன் (35), இடையர்பாளையத்தைச் சேர்ந்த விஜயகுமார் (32) ஆகியோரை கைது செய்தனர்.

கோவை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் தலா 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.7 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி வேடியப்பன் உத்தரவிட்டார்.



TATA

டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனிசூலா பிசினஸ் பார்க், கணபத்ராவ், கடம் மார்க், லோவர் பெரல், மும்பை-400013.

கிளை அலுவலகம்: டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டனியல் ஸ்கூயர், # 6A, Dr. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

(பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1)-ன்கீழ்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் விதி 9(1)-ன்கீழ் மின்-ஏலம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான 15 நாட்களுக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் மற்றும்/இணை கடன்தாரர் அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகளுக்கு (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், கடன் அளித்தவரால் அறிவிக்கப்படும் அறிவிப்பாகும், TCHFLயின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (TCHFL)**-க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் மற்றும் இணை கடன்தாரர்களிடமிருந்து நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்க **22.12.2026 அன்று "இருக்கும் நிலையில்"** மற்றும் **"எது இருந்தாலும்"** என்ற அடிப்படையில் **"எந்த ஆதாரமும் இல்லாமல்"** விற்கப்படும். ரிசர்வ் விலை மற்றும் அதிகபட்ச வைப்புத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விற்பனையில் ஏதேனும் ஒத்திவைப்பு/நிறுத்தம் இல்லாத நிலையில், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்துக்கள் மேற்கூறிய **22.12.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு** மின்-ஏலத்தில் விற்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான கோரிக்கை, நுஆனு வரைவோலையைக் கொண்ட சீல் வைக்கப்பட்ட உறை **TCHFL அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு 21.12.2026 அன்று மாலை 5.00 மணி அல்லது அதற்கு முன்** கிளை முகவரி **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டனியல் ஸ்கூயர், # 6A, Dr. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024** என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, பாதுகாக்கப்பட்ட சொத்து/அசையாச் சொத்தின் விற்பனை **"உள்ளது உள்ளபடியே உள்ள இடத்தில் உள்ளபடியே"** நடைபெறும்.

வ. எ ண்	கடன் கணக்கு எண்.	கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்) சட்ட வாரிசு(கள்)/சட்ட பிரதிநிதிகள்/ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	ரிசர்வ் தொகை	நிலுவைத் தொகை
01	TCHHL0479000100292925 & TCHHF0479000100292949 & TCHIN0479000100293846	திரு. எசக்கியப்பன் காளிமுத்து திருமதி மகாலட்சுமி	ரூ.32,47,935/- மற்றும் 09.09.2025	ரூ.38,64,800/- முன்வைப்புத் தொகை (EMD) : ரூ.3,86,480/- சுவாதீனம் வகை : பிசிக்கல்	ரூ.3846204/- மற்றும் 12.11.2026

அசையா சொத்தின் விவரம்: திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுகா, பல்லடம் கிராமம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், மற்றும் பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சித்தன்வளம் கிராம பஞ்சாயத்து கிராமத்தில் அமைந்துள்ள சொத்து. சர்வே எண் 384/7-ல் பரப்பு 4.71 ஏக்கர் (இதில் 1.35 ஏக்கர் = 0.75 செண்ட் சம்மந்தப்பட்ட சொத்தில் அடங்கும்) மேற்கு-சர்வே எண் 384/2B; கிழக்கு-சர்வே எண் 385/386; வடக்கு-சர்வே எண் 384/2; தெற்கு-சர்வே எண் 383/8. மொத்த பரப்பளவு 0.54.65 ஹெக்டேர் = 1.35 ஏக்கர் = 0.75 செண்ட்.

இச்சொத்து பல்லடம் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைந்துள்ளது சர்வே எண் 384/7B. பட்டா எண் 258-ன் கீழ் இருந்து, பின்னர் பட்டா எண் 1692-க்கு மாற்றப்பட்டுள்ளது. குடியிருப்பு மனை அமைப்பதற்கான அனுமதி திருப்பூர் நகர மற்றும் ஊரமைப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது அனுமதி எண்: 154/23 vide Roc.No.EU53BY11/2022.TCP, தேதி: 19.07.2023. இதன்படி, சித்தன்வளம் கிராமம், சர்வே எண் 384/7B, பட்டா எண் 1692, நிலமானது குடியிருப்பு மனைகளாக மாற்றப்பட்டு, தனித்தனி மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இச்சொத்து வேலன் நகர், பல்லடம் பகுதியில் மனை எண் 20-ஆக அமைந்துள்ளது. **சொத்து எல்லைகள்:** தெற்கு - மனை எண் 17; வடக்கு - மனை எண் 19; கிழக்கு - மனை எண் 21; மேற்கு - சாலை. **அளவுகள்:** கிழக்கிலிருந்து மேற்கு (வடக்கு பக்கம்): 30 அடி; கிழக்கிலிருந்து மேற்கு (தெற்கு பக்கம்): 30 அடி; வடக்கிலிருந்து தெற்கு (கிழக்கு பக்கம்): 50 அடி 8 அங்குலம்; வடக்கிலிருந்து தெற்கு (மேற்கு பக்கம்): 50 அடி 4 அங்குலம். மொத்த பரப்பளவு: 1515.11 சதுர அடி = 140.75 சதுர மீட்டர்ஸ். இச்சொத்து பல்லடம், வேலன் நகரில், சர்வே எண் 384/10-ல் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைத் திட்டத்தில் புதிய மனை எண் 20-ஆக அமைந்துள்ளது.

மொத்த பரப்பளவு: 1515.11 சதுர அடி = 140.75 சதுர மீட்டர்ஸ். இச்சொத்து பல்லடம், வேலன் நகரில், சர்வே எண் 384/10-ல் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைத் திட்டத்தில் புதிய மனை எண் 20-ஆக அமைந்துள்ளது. எல்லைகள்: கிழக்கு:-, மேற்கு:-, வடக்கு:-, தெற்கு:-.

வ. எ ண்	கடன் கணக்கு எண்.	கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்) சட்ட வாரிசு(கள்)/சட்ட பிரதிநிதிகள்/ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	ரிசர்வ் தொகை	நிலுவைத் தொகை
02	TCHHF0479000100238157 & TCHHL0479000100238108 & TCHIN0479000100240459	திரு. K ரங்கையா	ரூ.19,21,089/- மற்றும் 10.06.2026	ரூ.25,31,800/- முன்வைப்புத் தொகை (EMD) : ரூ.2,53,180/- சுவாதீனம் வகை : பிசிக்கல்	ரூ.2058177/- மற்றும் 12.11.2026

அசையா சொத்துக்கள் விவரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் சார் பதிவு மாவட்டம், அவினாசி தாலுகா, கீரகவுண்டம்பாளையம் கிராமம், S.F.No.518/5 புஞ்சை ஏக்கர் 1.23 நிலம் குடியிருப்பு லேஅவுட்டாக மாற்றப்பட்டது, இதில் சைட் எண்.8, மற்றும் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகள் : தெற்கு : சைட் எண்.10, மேற்கு : 20 அடி அகல வடக்கு தெற்கு சாலை, வடக்கு - 20 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு - சைட் எண்.9. இதன் மத்திய, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் - 34 1/2 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் - 32 1/2 அடி, வடக்கு தெற்காக இருபக்கமும் - 53 1/4 அடி, பரப்பளவு 1783 சதுர அடி நிலம் அல்லது 165.64 சதுர மீட்டர் அல்லது 4 சென்ட்ஸ் 40 1/2 சதுர அடி மற்றும் சாலைகள் மற்றும் பொது பாதை வழிகள் வழக்கமான உரிமைகள். மேற்கூறிய சொத்து எஸ்.எப்.எண். 518/3 மற்றும் 4 மற்றும் தற்போது துணை பிரிவு கா.சா. 518/5ஏ1-க்குட்பட்டது. மேற்கூறிய சொத்து கீரகவுண்டம்பாளையம் பஞ்சாயத்து, அன்னூர் யூனியன் எல்லைகளுக்குட்பட்டது.

குறிப்பு : ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் உரிய விசாரணையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வழக்கு, தகராறு ஏதேனும் இருந்தால் அதன் முடிவுக்கு உட்பட்டது.

ஏலத்தில், பொதுமக்கள் பொதுவாக தங்கள் ஏலங்களை நேரில் சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள். இந்த விற்பனை தொடர்பாக எந்தவொரு கடமையும் கொண்ட எந்தவொரு அதிகாரியோ அல்லது வேறு நபரோ விற்கப்பட்ட அசையாச் சொத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு பங்கையும் ஏலம் எடுக்கவோ, கையகப்படுத்தவோ அல்லது பெற முயற்சிக்கவோ கூடாது.

இந்த விற்பனை பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ல் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது:

குறிப்பு : சொத்துக்களின் மின் ஏலம் http://bankauctions.in/ போர்டல் மூலம் 22.12.2026 அன்று மாலை 2.00 மணி முதல் மாலை 3.00 மணிக்கிடையில் நடைபெறும், ஒவ்வொன்று 5 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட்ட நீட்டிப்பு

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : 1) கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவரின் சிறந்த தகவலுக்கு ஏற்ப கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடலுக்கு கீழே கையொப்பமிட்டவர் பொறுப்பேற்கமாட்டார், ஏலத்தொகை அல்லது ஏலதாரருக்கு ஏதேனும் தகராறு ஏற்பட்டால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பத்திற்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஏலத்திற்கு விடப்படும். 2) அசையாச் சொத்து ரிசர்வ் விலைக்குக் கீழே விற்கப்படாது. 3) ஏல உயர்வுத் தொகை: **ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்).** 4) சொத்தை வாங்குவதற்காக ஏலங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி வைப்பு பணத்துடன் **"டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்"** என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பவேண்டும், கிளை முகவரியில் செலுத்தப்படும் டிமாண்ட் டிராப்ட்கள் ஏலத்திறக்குப் பிறகு தோல்வியுற்ற ஏலதாரர்களுக்கு திருப்பித் தரப்படும். NEFT/RTGS/IMPS மூலம் EMD செலுத்த, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5) அதிகபட்ச ஏலதாரர் எப்போதும் சட்டப்பூர்வமாக ஏலம் எடுக்கத் தகுதி பெற்றவராகவும், மேலும் ஏலத் தொகை இருப்பு விலையை விட குறைவாக இருந்தால், அவர் பெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்படுவார், வழங்கப்பட்ட விலை மிகவும் போதுமானதாகத் தோன்றாத அளவுக்கு அவ்வாறு செய்வது விரும்பத்தகாததாகத் தோன்றும்போது, அதிகபட்ச ஏலத்தை ஏற்றுக்கொள்வதை மறுப்பது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பப்படி இருக்கும். 6) பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்திவைப்பது/நிறுத்துவது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பப்படி இருக்கும். 7) **அசையாச் சொத்தை ஆய்வு செய்வது 14.12.2026 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணி வரை முன் அனுமதியுடன் மேற்கொள்ளப்படலாம்.** 8) வெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், அத்தகைய அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, EMD தொகை உள்ளடக்கிய கொள்முதல் பணம்/ஏலத் தொகையில் இருபத்தைந்து சதவீதத்தை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் 24 மணி நேரத்திற்குள் டெபாசிட் செய்ய வேண்டும், மேலும் அத்தகைய வைப்புத் தொகை செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக தனியார் ஒப்பந்தத்தின் மூலம் புதிய ஏலம்/விற்பனைக்கு வைக்கப்படும். 9) மேற்கூறியபடி ஆரம்ப வைப்புத் தொகை செய்யப்பட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதமுள்ள தொகை வாங்குபவர் சொத்து விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு முன்போ அல்லது அதற்கு முன்பாகவோ, அந்த நாளைத் தவிர்த்து அல்லது 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறை நாளாக இருந்தால், 15வது நாளுக்குப் பிறகு முதல் அலுவலக நாளில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு செலுத்த வேண்டும். 10) மேலே குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஏதேனும் பணம் செலுத்தத் தவறினால், சொத்து தனியார் ஒப்பந்தத்தின் மூலம் புதிய ஏலம்/விற்பனைக்கு விடப்படும் EMD உள்ளிட்ட வைப்புத் தொகை **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**-ஆல் பறிமுதல் செய்யப்படும், மேலும் தவறிய வாங்குபவர் சொத்துக்கான அனைத்து உரிமை கோரல்களையும் இழப்பார். 11) சொத்து பொறுப்பேற்க வேண்டிய **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**-க்குத் தெரிந்த ஏதேனும் வில்லங்கங்கள் விவரங்கள்: மேலே உள்ள அட்டவணையின்படி சொத்து வரி, மின்சாரம் போன்ற சட்டப்பூர்வ பொறுப்புகள் பகுதிகள் உட்பட, சொத்தின் மீதான வில்லங்கங்கள் குறித்து, விருப்பமுள்ள ஏலதாரர்கள் தாங்களாகவே சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். 12) **வேறு ஏதேனும் விவரங்களுக்கு அல்லது மின்னணு ஏலம் குறித்த நடைமுறை ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் சேவை வழங்குநர் M/s. 4Closure, பிளாக் எண். 605 ஏ, 6வது தளம், மைதிரிவனம் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத் - 500038, மின்னஞ்சல் : info@bankauctions.in அல்லது மாற்று தொடர்புக்கு TCHFL-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி: திரு. மனிஷா பன்சல் (PAN India) Manish.Bansal@tatacapital.com, மொபைல் எண். 8588983696, திரு. சுனில் சர்மா (கிழக்கு மற்றும் மேற்கு மண்டலங்கள்) sunil24.sharma@tatacapital.com, மொபைல் எண். 9960796000, அல்லது திரு. பிரசாந்த் தோக்னே (வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்கள்) prashant.dhokne@tatacapital.com, மொபைல் எண். 7020997972, ஏலதாரர்கள் தங்களுக்குத் தேவையான உதவி மற்றும் விளக்கங்களைப் பெறுவதற்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புகளுக்குத் தங்கள் வினாக்களை அனுப்பலாம்.** 13) அதிகபட்ச ஏலத் தொகைக்கு மேல் 1மூ வனுஸ் பொருந்தும் மற்றும் அதிக ஏலதாரர் செலுத்த வேண்டும், ஏலதாரர் உரிமையாளர்/கடன் வாங்குபவரின் PAN-ல் பணம் செலுத்த வேண்டும் மற்றும் சலான் நகலை எங்கள் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். 14) மேலே உள்ள விவரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடன் அளித்தவரின் வலைத்தளமான https://me-l.co/0mafqlg4-ல் கொடுக்கப்பட்டுள்ள கீழே உள்ள இணைப்பை பார்க்கவும். 15) தயவுசெய்து இணைப்பையும் பார்வையிடவும்: https://www.tatacapital.com/property-disposal.html.

தயவுசெய்து கவனிக்கவும் - இந்த சொத்தின் விற்பனை/ஏலத்திற்காக TCHFL குறிப்பிடப்பட்ட ஏல பங்குதாரரைத் தவிர வேறு எந்த தரகர்/முகவரையும் ஈடுபடுத்தவில்லை, இந்த விஷயத்தில் அனைத்து கேள்விகள் மற்றும் விசாரணைகளுக்கும் ஆர்வமுள்ள தரப்பினர் கீழே கையொப்பமிட்டவரை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம் : தமிழ்நாடு **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
நாள் : 20.11.2026 **டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

CB-CB

quick scroll

FM meets tech sector representatives



